[1992 பிப்ரவரி 5

(அ) சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளை தற்பொழுது திறக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது திறக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரியின் முக்கியத்துவத்தை உணர்ந்து கன்னியாகுமரி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியினுடைய புதிய கிளையை கன்னியாகுமரியிலே திறப்பதற்கு அரசு அனுமதித்து இருக்கிறது. அது விரைவிலே துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு வங்கியின் கிளையைத் திறப்பதற்கு அனுமதி வழங்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு குமரித் தொகுதி மக்கள் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வங்கிக்குச் சொந்தமாக புதியதாக கட்டிடம் கட்டித்தர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிய கிளை உடனடியாகத் துவங்கப்படும். கட்டிடம் கட்டி முடிப்பதற்கு சற்று கால தாமதம் ஆகும். அதற்கு நிதியும் தேவை. ஆகவே, அது பின்னாலே பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 55. திரு. எஸ். எஸ். ராமசுப்பு. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

55—

ஆலங்குளத்தில் விவசாயக் கல்லூரி.

*1328)— திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளத்தில் விவசாயக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம், எனில், அதற்கான பணி எப்போது துவக்கப்படும் ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1992 பிப்ரவரி 5]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,—

(அ) நெல்லை கட்டபொம்மன் ஆலங்குளத்தில் புதிய விவசாயக் கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

(ஆ) எனவே அது தொடர்பான மற்றொரு கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலிக்கு மேற்குபக்கமாக உள்ள ஆலங்குளம், தென்காசி அம்பாசமுத்திரம், சேரன்மகாதேவி மற்றும் வாசுதேவநல்லூர், அந்தப் பகுதிகளைச் சுற்றி எந்த அரசு கல்லூரியுமே கிடையாது. அதுவும் விவசாயத்தை நம்பி வாழ்கின்ற அந்தப் பகுதியிலே ஒரு விவசாயக் கல்லூரியை அமைத்தால் மிகப் பொருத்தமாக இருப்பதோடு மட்டுமல்லாமல் அங்கு விவசாயக் கல்லூரி அமைக்கப்படும்பொழுது விவசாய ஆராய்ச்சிப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட இருப்பதினால் அந்த விவசாயக் கல்லூரியை அங்கே ஏற்படுத்த அரசு மறுபரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் கிள்ளிகுளம் என்ற ஊரில் ஒரு வேளாண்மைக் கல்லூரி செயல்பட்டு வந்துகொண்டிருக்கிறது. கிள்ளிகுளத்திற்கும், ஆலங்குளத்திற்குமிடையே 35 கிலோ மீட்டர் தான் இடைவெளி இருக்கிறது. கோவில்பட்டியில் புஞ்சை தானியங்கள் ஆராய்ச்சிக்காக ஒரு வேளாண் பயிற்சி மையமும், அம்பாசமுத்திரம் நஞ்சைப் பயிர் ஆராய்ச்சி மையமும் செயல்பட்டு வந்து கொண்டிருக்கின்றன. எனவே புதிய கல்லூரி அமைக்கும் உத்தேசம் அரசிடம் தற்போது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 56, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்

56—

ஓசூரில் வீட்டுவசதி வாரிய வீடுகள்.

*1301—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வீட்டு வசதித் துறை மூலமாக ஓசூரில் கட்டப்பட்டுள்ள சில வீடுகளின் தொகுதி உயர்நீதிமன்ற தடையாணையால் ஒதுக்கப்படாமல் இருப்பதை அரசு அறியுமா? ...